தொகுதி 1
சித்திரம் 8

# பொன்னிவளநாட்டின் வீர சரித்திரம்



# கொடிய சாபம்

www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing

பகுதி-1 சித்திரம்-8

# கொடிய சாபம்

குன்னுடையான் தனக்கு கிடைத்த பெருஞ்செல்வத்தை கொண்டு, தனது தந்தையின் அரண்மனை இருந்த இடத்தில், புதிய அரண்மனையை கட்டினான். அரண்மனை திறப்பு விழாவிற்கு, மூன்று தேசத்து அரசர்களையும், சுத்துபட்டு கிராமத்துப் பிரதிநிதிகளையும், மக்களையும் அழைத்து சிறப்பாக கொண்டாடினான். அப்போது, மூவேந்தரும் இணைந்து பொன்னிவளநாட்டை ஆளும் உரிமையை அவனுக்கு கொடுத்தனர்.

நாடே மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், தாமரை மட்டும் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தாள்.







மறுவர்ணனை
பிரெண்டா பெக். இ கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம் சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன் & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன் ஸ்டெப்பான் ஹானிஹன்

ஓப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா பப்ளிகேசன்
© 2012
சாப்ட்சைன்ஸ் அசோசியேசன் லிமிடட்.


குன்னுடையான் தனது குடிசையில்...
கடந்த சில நாட்களாக எவ்வளவு அதிசயங்கள் நடக்கிறது! இவை அனைத்தும் விஷ்ணுவின் கருணையே!
இந்த செல்வத்தை கொண்டு தாமரையின் விருப்பம் போல், ஒரு பெரிய அரண்மனையை கட்டவேண்டும்.
அதற்கு விஷ்ணுவின் உதவி வேண்டும்.



காஞ்சிநாதா! தங்களிடம் ஒரு உதவி வேண்டி அழைக்கிறேன்!
அவன் வேண்டுதலை கேட்ட விஷ்ணு உடனே தன் கருடவாகனமேறி பூமிக்கு வந்தார்.
மங்களம் உண்டாகட்டும். என்ன உதவி வேண்டும் குன்னுடையா?


என் குடும்ப அரண்மனை இருந்த இடத்தில் ஒரு புதிய அரண்மனையை கட்டவுள்ளேன்.
சுவாமி! அதற்கு உங்கள் உதவி தேவை.
தயவுசெய்து பழைய அரண்மனை இருந்த இடத்தை காட்டவேண்டும்.
சரி! என்னுடன் வாருங்கள்.
விஷ்ணுவை பின்தொடர்ந்து இருவரும் சென்றனர்.





அரண்மனை இருந்த இடத்தைப் பார்த்ததும்
குன்னுடையாக்கவுண்டருக்கு தன் பழையநினைவுகள் ஞாபகம் வந்தது.



நான் அரண்மனையின் நான்கு மூலைகளையும் காண்பிக்கிறேன்.
இங்கே வடக்கு...!
அருகில் கிழக்கு...!
அங்கே மேற்கு...!
இங்கே தெற்கு...!
விரைவில் வேலையை தொடங்க என் ஆசீர்வாதங்கள்!
விஷ்ணுவின் ஆசீர்வாதத்தோடு அரண்மனையை நல்லபடியாக கட்டி முடிக்கலாம்.
எப்போது ஆரம்பிக்க போகிறீர்கள்?
ம்! அடுத்த வெள்ளிக்கிழமை பாலக்கால் பூஜையை வைத்துக் கொள்ளலாம்.
அதற்கு அணியப்பூர் சென்று கவுண்டர்களை அழைத்து வருகிறேன்.



குன்னுடையான் அணியப்பூர் சென்று, விநாயகர் கோவிலில் இருந்த கவுண்டர்களைச் சந்தித்தார்.
வணக்கம்.
நாங்கள் ஒரு புதிய அரண்மனை கட்டப்போகிறோம்.
அதற்கு இங்கே உள்ள அனைவரையும் விழாவிற்கு அழைக்க வந்துள்ளேன்.
நன்றி! உங்கள் விழாவில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.
அவசியம் வருகிறோம்!



பாலக்கால் போடும் விழா வெகு சிறப்பாக முடித்து, அரண்மனையை கட்டும் வேலையை துவங்கினர்.
நாதா!
நம் வேலையாளை அணியப்பூருக்கு அனுப்பி, கொத்தனார்களை அழைத்து வரச்சொல்லுவோம்.
ஏனப்பா! இங்கே வா!
நீ அணியப்பூர் சென்று கொத்தனார்களை அழைத்து வா.


வேலைக்காரன் அணியப்பூரை சென்றடைந்தான். அங்கே இருந்த சிலரிடம்...
அய்யா! இங்கே கொத்தனார்களின் வீடு எங்கே இருக்கிறது?
அதோ அங்கே!
அவர்கள் காட்டிய திசையில் சென்று, கொத்தனாரின் வீட்டை அடைந்தான்.
ஐயா! பொன்னிவளநாட்டு குன்னுடையாக்கவுண்டர், அரண்மனை ஒன்று கட்டுவதற்காக உங்களை அழைத்து வரச்சொன்னார்.
நல்லது!
என் ஆட்களுடன் நாளையே வருகிறேன்.


மறுநாள் கொத்தனார்கள்
பொன்னிவளநாட்டை
சென்றடைந்தனர்.
வாங்க! வாங்க!
செய்தியை
அறிந்திருப்பீர்கள்!
சீக்கிரமாக அரண்மனையை
கட்டிமுடிக்க வேண்டும்.
நல்லதுங்க!
விரைவில் வேலையை
ஆரம்பிக்கிறேன்.
சரி! இதோ
உங்கள் முன்
கூலியாக...
தாமரை!
முத்து ஒரு வள்ளம்
எடுத்து வந்து
கொடு!



குன்னுடையான் அரண்மனை எப்படி இருக்கவேண்டும் என்று விளக்கி கூறினார்.
அனைவரும் அமர்ந்து பேச ஒரு அறை. சமையல் செய்யவும், உணவருந்தவும் ஒரு அறை.
படுக்கைஅறை, பின் ஆடைஅணிகலங்கள் வைக்க தனியாக ஒரு அறை, அத்தோடு பெரிய களஞ்சிய அறையும் கட்ட வேண்டும்.



சில மாதங்களில் அரண்மனை கட்டி முடிக்கப்பட்டது.
சாமி! அரண்மனையை கட்டி முடித்து விட்டோம்.
தங்களுக்கு பிடிக்கும் என்று எண்ணுகிறோம்.
ஆம்! அருமையாக கட்டியுள்ளீர்கள்.
தாமரை! இவர்களுக்கு இன்னும் ஒரு வள்ள முத்தைக் கொண்டு வந்து கொடு.
இருவரும் மகிழ்ச்சியாக புதிய அரண்மனையில் குடி புகுந்தனர். விரைவில் அரண்மனையில் வேலை செய்ய பலரை நியமித்தனர்.
இங்கே ஒருவர் வேலை கேட்டு வந்துள்ளார்.


இந்த அரண்மனையைக் காவல் காக்க ஒரு காவலாளி தேவை.
அதற்கு இவரையே சேர்த்துக்கொள்ளலாமோ?
நீ எங்கேயிருந்து வருகிறாய்?
நான் பறை அடிப்பவர் குடும்பத்திலிருந்து வருகிறேன்.
ம்... மிகவும் பலசாலியாக இருக்கிறாய்!
எங்களுக்கு நேர்மையான ஒருவர் தேவை.
சாமி! நம்பிக்கையுடன், விசுவாசமாக இருந்து உங்களுக்கு சேவை செய்வேன்.
சரி! உன்னை எங்களின் அரண்மனை காவலாளியாக நியமிக்கிறேன்.



உன் முதல் வேலையாக சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடம் சென்று, அம்மூவரையும் நம் அரண்மனை திறப்புவிழாவிற்கு அழைத்து வா!
அத்தோடு, சுத்துபட்டு ஐம்பத்தியாறு கிராமத்துப் பிரதிநிதிகளையும், அக்கிராம மக்களையும்,
இறுதியாக, தங்கவளநாடு சென்று பங்காளிகளையும், நீ அழைத்துவர வேண்டும்.
நான் சொன்னது புரிந்ததா? விரைந்து செல்!


காவலாளி அனைவரையும் அழைத்து வந்தான்.
அரண்மனை முழுவதும் விருந்தினர்கள் நிறைந்திருந்தனர்.
அரசர்களையும், மக்களையும் எங்கள் புதிய அரண்மனைக்கு வரவேற்கின்றேன்.
விழா ஆரம்பிக்கட்டும்.
அனைவருக்கும் நன்மையே உண்டாகட்டும். நீடூழி வாழ்க!
இந்த இனிய நாளில், இப்பொன்னிவளநாட்டை ஆளும் உரிமையை குன்னுடையாக் கவுண்டருக்கு வழங்க நாங்கள் முடிவுசெய்துள்ளோம்.


சோழமன்னன் கூறியதை கேட்ட பங்காளிகள் பொறாமையடைந்தனர். மன்னன், குன்னுடையானுக்கு முடிசூட்டுவதற்கான ஆடை ஆபரணரங்களை கொடுத்தார்.
அவர் அவைகளை அணிந்து கொண்டார்.


சோழமன்னர் குன்னுடையானுக்கு “பொன்னிவளநாட்டின் அரசர் “ என்று முடி சூட்டினார்.
நீ சிறந்த முறையில் பொன்னிவளநாட்டை அரசாள்வாய் என்று நம்புகிறேன்.
நீ மக்களுக்கு தான, தருமங்கள் செய்ய வேண்டும்.
அத்தோடு உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்.
குன்னுடையா, நீ மனுநீதி தவறாமல், நாட்டுமக்களின் குறைகளை தீர்த்து, செங்கோலாட்சி செய்யவேண்டும்.


நீங்கள் கூறியபடியே நல்லாட்சி செய்து, மக்களுக்கும், தங்களுக்கும் விசுவாசமாக இருப்பேன் என்று உறுதியளிக்கிறேன்.
என்ன தங்கவளநாட்டுப் பங்காளிகளே! சொத்துகளையெல்லாம் குன்னுடையானுக்கு திருப்பி கொடுத்துவிட்டீர்களா?
இ... இல்லை... மன்னா! விரைவில் கொடுத்துவிடுகிறோம்.
விழா இனிதே நிறைவடைந்தது.
அனைவருக்கும் எங்கள் ஆசிகள்! சென்று வருகிறோம்.


நாட்கள் மிக இனிதாக கழிந்தது. குன்னுடையான் பொன்னிவளநாட்டை சீரும்சிறப்புமாக ஆட்சி செய்தார்.
தம்பதிகள் நாள் தவறாமல் செல்லாத்தாளுக்கு பூஜை செய்தனர்.
மழை காலம் தவறாமல் பெய்தது. இதனால், பொன்னிவளநாடு செழிப்படைந்தது.



ஆனால், தாமரை மட்டும் வருத்தமாக இருந்தாள்.
உங்கள் ஆட்சியில் நாடே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது! ஆனால்...நம் வீட்டில் சந்தோசமில்லை!
என்ன! சொல்கிறாய் தாமரை?
எல்லாம் இருந்தும், நீண்டகாலமாக நமக்கு ஒரு குழந்தை இல்லையே!
கவலைபடாதே தாமரை! இதுதான் நம் விதி என்றால், அதை யாராலும் மாற்ற முடியாது.
இந்த வேதனையை என்னால் தாங்க முடியவில்லை.


குன்னுடையான் எவ்வளவு ஆறுதல் சொல்லியபோதும், தாமரை சமாதானம் ஆகவில்லை...
ஐயோ! என்ன பாவம் செய்தேன்! எனக்கேன் இந்தநிலை!
அவளுக்கு குழந்தை இல்லாததற்கு ஏதோ ஒரு தவறு செய்து விட்டதாக அவள் எண்ணினாள்.

பொன்னிவளநாட்டில் உள்ள ஒரு மண்டபத்தில் இருவரும் கவலையுடன் அமர்ந்தனர்.






உங்களுக்கு சொந்தமான சொத்துக்களை எல்லாம் பறித்துக்கொண்டவர்கள்.
அத்தோடு வளமற்ற நிலத்தை கொடுத்து...
வறுத்த விதைகளையும் விதைக்க தந்து, வஞ்சித்ததை மறந்து விட்டீர்களா?
உங்கள் அரண்மனையை இடித்தது. நினைவில்லையா?
நான் எதையும் மறக்கவில்லை!
ஆனால், நான் இப்பொழுது பொன்னிவளாவை ஆள்பவன்.
எனக்கு அனைவரும் சமமே!


இதை எல்லோர் முன்நிலையிலும் சத்தியம் செய்திருக்கிறேன்.
நமக்குதான் குழந்தையில்லை என்றால்...
நம்மிடம் வேலை செய்பவர்களுக்கும், நம்மை அண்டிப்பிழைக்கும் பிராணிகளுக்கும் குழைந்தை பாக்கியம் இல்லையே!


நான் இதை சோதித்து பார்க்க போகிறேன்
அணியபபூருக்கு நம் ஆட்களை அனுப்பி, சில விலங்குகளை வாங்கி வரச் சொல்லப்போகிறேன்.
உன் மனம்போல் செய் தாமரை.
தாமரை குழந்தை பாக்கியம் இல்லாத குறையை கண்டறிய தயாரானாள்.
சேவகா!
நீ இந்த முத்துக்களை எடுத்துக்கொண்டு அணியப்பூர் சென்று...
அங்கே பன்றி, குதிரை, மற்றும் இளங்கன்றாக பார்த்து, அனைத்திலும் ஓவ்வொரு ஜோடி வாங்கி வா.


சேவகன் அணியப்பூரை சென்றடைந்து, அங்கே விநாயகர் கோவிலில் இரண்டு பேர் இருப்பதை பார்த்தான்.
வணக்கம் ஐயா!
பொன்னிவளநாட்டு தாமரைக்கவுண்டச்சி, என்னிடம் இந்த முத்துக்களை கொடுத்து, நீலக்குதிரை, பன்றி, மற்றும் இளம் மாட்டுக்கன்று அனைத்திலும், ஒவ்வொரு ஜோடி வாங்கி வரச் சொன்னார்கள்.
அவைகள் திடமாக இருக்க வேண்டும்.


அப்படியா! நன்று, நாங்கள் உனக்கு உதவுகிறோம்.
இங்கே திடமான விலங்குகள் கிடைப்பது அரிது. நான் சோழதேசம் சென்று பார்த்து வருகிறேன்.
அவர்கள் சேவகனிடம் முத்துக்களை பெற்றுக்கெண்டு, சோழதேசம் நோக்கி சென்றனர். அவர்கள் வரும் வரை அவன் விநாயகர் கோவிலில் காத்திருந்தான்.
நீண்ட நேரத்திற்கு பின்பு, அவர்கள் விலங்குகளுடன் வந்தனர்.


சேவகன் பொன்னிவளநாட்டிற்கு விலங்குகளுடன் பயணமானான்.
சேவகா!
நான் சொன்னது போல் வாங்கி வந்தாயா?
ஆமாம் தாயே!
அவைகளை அரண்மனைக்கு பின்புறம் கட்டியுள்ளேன்.



வருடங்கள் பல கடந்தன. பன்றி, குதிரை மற்றும் மாட்டுக்கன்று, அனைத்தும் பெரியதாக வளர்ந்துவிட்டது.
ஆனால், அவைகளுக்கும் குழந்தை பாக்கியம் ஏற்படவில்லை.
நான் என்ன தவறு செய்தேன்!
எனக்கும், என்னை சார்ந்தவர்களுக்கும் தான் குழந்தையில்லை என்று எண்ணினேன்.
ஆனால், நான் வாங்கிவந்த, மூன்று விலங்குகளுக்குமே குழந்தை இல்லையே!
ஆ! அப்படியா?


நான் செல்லும் இடமெல்லாம், குழந்தைகளை பார்க்குபொழுது...
நாம் கொஞ்சி விளையாட ஒரு குழந்தையில்லையே என்ற ஏக்கம் என்னை வாட்டுகிறது.
எனக்கு மனமே சரியில்லை! செல்லாத்தா கோவிலுக்கு சென்று வருகிறேன்.
அங்கே பார்! மலடி வருகிறாள்.
அவள் அரசியாக இருப்பதற்கே தகுதியற்றவள்.
அவள் நம் அருகில் வருகிறாள்.
ஏய்! மெதுவாக பேசு!
அவர்கள் கூறிய அவதூறுகள் தாமரையின் காதில் விழுந்தது.
ஓ.......ஓ,.......


இதனால் மனமுடைந்த தாமரை அழுதபடி அரண்மனைக்கு திரும்பினாள்.
ஓ... ஓ...
அப்பொழுது அங்கே வந்த குன்னுடையான்...
ஏன் அழுகிறாய் தாமரை?
நீ அழுவதினால் எதுவும் மாறப்போவதில்லை!
நான் வாளவந்திக்கு சென்று என் அண்ணன்களின் குழந்தைகளை பார்க்க வேண்டும் போல் உள்ளது!
என்ன! நீ வாளவந்திக்கு போகப்போகிறாயா?
தாமரை! நீ நடந்ததை எல்லாம் மறந்துவிட்டாயா?


உன் அண்ணன்கள் என்னை அடித்து அவமானப் படுத்தி, மாட்டுக் கொட்டாரத்தில் அடைத்து வைத்தனர்.
உண்மைதான்!
அத்தோடு, நம் கல்யாணச்சீராக, வரகை கொடுத்து, அவமானப்படுத்தி, ஊரைவிட்டே துரத்தினர்.
இப்படியெல்லாம் செய்த அவர்களிடமா நீ போகப்போகிறாயா?
ஆம்! அப்போழுது இருந்த கோபத்தில், அவர்கள் அப்படி செய்துவிட்டனர்.
ஆனால், இப்பொழுது நான் அங்கு சென்றால் சந்தோசப்படுவார்கள்.
தயவுசெய்து! நான் அங்கு செல்வதை தடுக்க வேண்டாம்.



தாமரை, கணவன் சொல்வதை கேட்காமல் வாளவந்திக்கு செல்வதற்கான ஏற்பாட்டை செய்கிறாள். அங்கே, அவளுடைய அண்ணன்கள் அவளை ஏற்றுகொள்வார்களா? இல்லையெனில், குன்னுடையான் அவளை மன்னித்து ஏற்பானா?



# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic8tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!








01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியின் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது


## 26யும் பெற்றுகொள்ள!

ISBN 978-1-927093-48-1
90000 >
9 781927 093481

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing